**Dina Karan, Coimbatore, Aug 25 2012**

# தொழில்நுட்ப போட்டியில் ஜிகேடி பள்ளி சாம்பியன்

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் சார்பில் தொழில்நுட்ப வினாடிவினா போட்டி கோவை ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கில் நடந்தது. இதில் 102 பள்ளிகளைச் சேர்ந்த 604 அணிகளில் மொத்தம் 1208 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

முதல் சுற்று மற்றும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற விறுவிறுப்பான இறுதிச்சுற்றில் கோவை ஜிகேடி பள்ளி மாணவர்கள் ஆதித்யன், ஆன்டே பிலிகஸ் கெஸ்விக் ஆகியோர் ஆகியோர் வெற்றி பெற்று கேலக்சி நோட்டுடன் வெற்றிக் கோப்பையை (சாம்பியன்) தட்டிச் சென்றனர்.

யுவபாரதி பள்ளியைச் சேர்ந்த அதிசாய் கிரண், ரியா டெனியல் ஆகியோர் இரண்டாம் இடம் பிடித்தனர். அவர்கள் கேலக்ஸி மற்றும் கோப்பை பெற்றனர்.